**செய்தி வெளியீடு: 675** **நாள் 16.12.2015**

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் நல்வாழ்வுத்துறையின் ஓர் அங்கமான உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறையின் பணிகள்!**

---

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் அண்மையில் பெய்த கனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கில் பல்வேறு பன்முக நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளார்கள். இதனையடுத்து, மக்கள் நல்வாழ்வுத் துறையின் ஒரு அங்கமாக விளங்கும் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையுடன் இணைந்து சென்னையில் 09.12.2015 முதல் 24 மாவட்ட நியமன அலுவலர்கள் மற்றும் 70 உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள் மூன்று பிரிவுகளாக பிரிந்து வெள்ள நிவாரண பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

முதல் பிரிவு 7 குழுக்களாக பிரிந்து சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் நோய் தடுப்பு மருந்துகளை (Vaccine) சேமித்து வைக்கம் குளிர் சாதனப் பெட்டிகள் (Cold Chain - ILR) இயங்கி வருகிறதா என்று ஆய்வு செய்து வருகிறது. இதுவரை மொத்தம் 147 ILR குளிர் சாதன பெட்டிகள் இதுவரை ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது பிரிவு 8 குழுக்களாக பிரிந்து காய்ச்சல், வயிற்றுப்போக்கு மற்றும் தொற்று நோய்கள் பாதிக்கா வண்ணம் உடனடியாக அங்கு சென்று தடுப்பூசி போடுவது மற்றும் மருத்துவ முகாம் அமைத்து மருந்து மாத்திரைகள் வழங்குவது போன்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்துகிறது.

மூன்றாவது பிரிவு 8 குழுக்களாக பிரிந்து சென்னைக்கு குடிநீர் விநியோகம் செய்யும் லாரிகளை கண்காணித்து அதில் தேவைப்படும் அளவிற்கு குளோரின் சேர்க்கப்பட்டுள்ளதா என்று இதுவரை 716 தனியார் லாரிகளில் குளோரின் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அறிவுறுத்தலை மீறி குளோரின் கலக்காத தண்ணீர் கொண்டு வரும் தனியார் லாரிகளுக்கு அபராதமும் விதிக்கப்படுகிறது. பாதுகாப்பான குடிநீர் பொது மக்களுக்கு வழங்குவதை உறுதி செய்துள்ளது.

இதுதவிர, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்படும் உணவு ஆய்வு செய்யப்பட்டு பாதுகாப்பான உணவு வழங்குவதை உறுதி செய்யப்படுகிறது. பள்ளிகளுக்கு முன் விற்கப்பட்டுவரும் சுகாதாரம் இல்லாத உணவுகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. மேற்கண்ட நடவடிக்கைகள் உணவு பாதுகாப்புத் துறையால் தொடர்ந்து தேவைப்படும் நாட்கள் வரை மேற்கோள்ளப்படும்.

**செய்தி வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 09.**